செ.வெ.எண்.277 நாள்.26.04.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 4 விவசாய உற்பத்தி குழுக்களுக்கு ரூ.20 இலட்சம் மானியத்திலான பவர் டில்லர் மற்றும் ரோட்டோ வேட்டர் கருவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

———————

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.04.2018) நடைபெற்றது. இக்கூட்டத்தில் கடந்த மார்ச் மாதத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட 370 மனுக்களில் வேளாண்மையைச் சார்ந்த 197 மனுக்கள் மற்றும் வேளாண்மை சாராத 173 மனுக்களுக்கும் பதில்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், வேளாண்மைத் துறையின் மூலம் குருவிகுளம், நாங்குநேரி, சேரன்மகாதேவி, முக்கூடல் பகுதிகளைச் சார்ந்த 4 விவசாய உற்பத்தி குழுக்களுக்கு 5 ரோட்டோவேட்டர் கருவிகளும், 7 பவர் டிரலலர்களும், 2 பவர் வீடர்களும், 1 டிராக்டர் உள்ளிட்ட வேளாண் கருவிகளை ரூ.20 இலட்சம் மானியத்திலும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் 4 விவசாயிகளுக்கு மானியத்திலனா கால்நடை தீவன குச்சிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது—

திருநெல்வேலி மாவட்டத்தில் 2018 ஜனவரி மாதம் முதல் தற்போது வரை 80.51 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. தற்போது அணைகளில் 18 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் 8 சதவீதம் மட்டுமே நீர் இருப்பில் இருந்தது. எனவே, இவ்வாண்டு கூடுதல் தண்ணீர் இருப்பதால் தாமிரபரணி ஆற்றில் இருந்து தேவையான குடிநீர் விநியோகம் செய்யப்படும். இதனால் குடிநீர் தட்டுப்பாடு இருக்காது. மணிமுத்தாறு அணையில் 79 அடி தண்ணீர் உள்ளது. இந்த தண்ணீர் முழுவதும் 3 மாவட்டங்களின் குடிநீருக்காக மட்டுமே பயன்படுத்தப்படும். எனவே, வருகிற ஜூலை மாதம் 2வது வாரம் வரை போதுமான தண்ணீர் உள்ளது. கடந்த பிசான பருவத்தில் 63 ஆயிரத்து 227 ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை செய்யும் பணிகள் முடியும் நிலையில் உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் 43 நெல் கொள்முதல் நிலையங்கள் முழுவதுமாக திறக்கப்பட்டு, 30 ஆயிரத்து 88 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் இதுவரை பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 40,150 விவசாயிகளுக்கு ரூ.80 கோடியே 59 இலட்சத்து 24 ஆயிரத்து 212/— வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 1072 விவசாயிகளுக்கு ரூ.2 கோடி வரை காப்பீட்டுத் தொகை வழங்கிட மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் கோரிக்கை மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், கோட்டாட்சித் தலைவர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.பெருமாள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி மற்றும் அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.